# குற்றமும் தண்டனையும் - ஒரு மெய்யியல் பகுப்பாய்வு

A.L.M. Riyal[1], K.L.F. Nafla[2], A.J.F.S. Jusla[3], A.F. Riska[4]
[1, 2, 3&4]Department of Social Sciences, South Eastern University of Sri Lanka
naflikl1992@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய வகையில், சட்டத்திற்குப் புறம்பாகத் தனி மனிதனுக்கோ, சமுதாயத்திற்கு எதிராகவோ செய்யப்படுவது குற்றம் எனப்படும். அதேநேரத்தில் குற்றம் என்ற வரையறைக்குள் அடங்குகின்ற செயற்பாடுகள் சில நேரங்களில் குற்றமற்றதாக அமைகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. குற்றம் ஏன் ஏற்படுகின்றது என்பதற்கு பொதுவான பல காரணிகள் குறிப்பிடப்படுகின்றன. குற்றமானது மனிதனிடமிருந்தான வெளிப்பாடா அல்லது சூழலிலிருந்தான பிரதிபலிப்பா என்பது மிகப்பெரும் விவாதத்தினைக்கடந்து வந்ததாகும். இன்னதைச்செய் மற்றும் இதைச் செய்யாதே என்று உரைக்கும் அதிகாரமும் அதனை ஒப்பாத அல்லது மீறுகிற எவரையும் தண்டிக்கிற அதிகாரமும் சட்டத்திற்குரியதாக கருதப்படுகின்றது. இது சமூகத்தை ஒழுங்கு, நெறிமுறை கட்டுப்பாடு என்பவற்றுக்குள் ஆட்படுத்தி கண்காணித்துக் கொண்டிருக்கிறது. மறுபக்கம், சட்டம் மக்களுக்கானது என்ற ரீதியிலேயே அமைகின்றது. குற்றம் ஒரு சமூக நிகழ்வு, சமூகத்தின் கையில் தனிநபர் ஒரு கருவி அவர் புரியும் குற்றங்களில் சமூகத்தின் பொறுப்பேற்பை உறுதி செய்யும் நடவடிக்கைகள் தண்டனை முறைகளில் வெளித் தோன்றுகின்றன. மனிதனது வாழ்க்கைக்கான போராட்டம் இயற்கை சார்ந்ததாக அமைந்திருந்த நிலை மாறி சமூகக் கட்டமைப்புக்கள் சார்ந்ததாக ஆகியிருக்கின்றது. சமூகக்கட்டமைப்பு ஏற்படுத்தியிருக்கும் அதிகார அமைப்பானது ஒழுங்குபடுத்தல்களாலும் வரிசைப்படுத்தல்களாலும் மனிதர்களை கண்காணித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு மனிதன் பிற மனிதர்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்கான அதிகார அமைப்பை தக்கவைப்பதற்கு குற்றம் - தண்டனை என்ற உருவாக்கங்கள் துணைபுரிகின்றதா? என்பதனை நோக்கமாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக்கொண்ட இவ்வாய்வு விளக்கவியல் மற்றும் பகுப்பாய்வு முறைமைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதான சொற்கள் - குற்றம், தண்டனை, ஒழுக்கம், சமூகம், நீதி

**அறிமுகம்**

சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய வகையில், சட்டத்திற்குப் புறம்பாகத் தனி மனிதனுக்கோ, சமுதாயத்திற்கு எதிராகவோ செய்யப்படுவது குற்றம் எனப்படும். பிழை, தவறு, குறை, பழி, பாவம், குற்றம் என்ற சொற்களை நாம் ஒரே பொருளைக் குறிக்கும் வகையில் சாதாரணமாகப் பயன்படுத்துகிறோம். ஆனால் குற்றம் என்ற சொல் சட்டத்தில் தனிப்பொருளுடையது. சட்டப்படி தண்டனைக்குரிய செயல்களே குற்றங்கள் ஆகின்றன. குற்றச் செயல்களில் பல தனி நபர்களின் உரிமைகளைப் பாதிக்கும், தீங்குகளாகவும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். ஆனால் குற்றங்கள் எல்லாம் சமூகத்திற்கும், தீங்கு விளைவிப்பனவாகவே இருக்கின்றன. எந்த நடத்தை சமூக வாழ்க்கைக்கு விரோதமான நடத்தையோ அதனைத் தண்டிக்க அரசாங்கத்தினால் விதிவிலக்குகள் செய்யப்படுகின்றன. அந்த நடத்தையைக் குற்றம் என்பார்கள். அதாவது சட்டத்தால் தண்டிக்கப்படும் நடத்தையைக் குற்றமெனலாம் (சிங்காரவேலனார், 2001: 05).

குற்றம் என்ற சொல் ஆங்கிலத்தில் crime என வழங்கப்படுகிறது. crime என்ற வார்த்தை ‘krima’ என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து ஆரம்பமானது. இது ‘சமூக முறை’ என்ற பொருள் கொண்டது. இவ்வாறாக crime என்ற வார்த்தை சமூக முறைமைக்கு எதிரான செயல்கள் மற்றும் கடுமையான கண்டனத்திற்கு உரிய செயல்கள் என்பதைக் குறிக்கும். குற்ற நடவடிக்கை என்பது பின்வரும் குணாதிசயங்களைக் கொண்டிருக்க முடியும் எனப்படுகின்றது. அதாவது,

1. வெளிப்படையானது : சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடியது, தனிப்பட்டது, கோபதாபங்களுடன் கூடியது, புத்தி சம்மந்தப்பட்டது.
2. செயல் வடிவமானது : ஒரு செயலால் செய்திருக்கலாம் அல்லது செய்ய வேண்டியவற்றை செய்யாமல் ஒதுங்கி இருக்கலாம்.
3. உள் நோக்கமுடையது : குற்றத்தின் ஒரு நோக்கம் அல்லது தெளிவு அல்லது காரணம் இருத்தல் வேண்டும்.

குற்றம் புரிவதற்கான காரணங்கள் அகநிலையானவை, புறநிலையானவை என இரண்டாக நோக்கப்படுகின்றது. அகநிலையான காரணங்கள் எனும்போது இயற்கை, பிறப்பு மற்றும் புத்தி சுவாதினம் அற்ற நிலைமை என்பனவற்றைக் குறிப்பிடலாம். புறநிலையான காரணங்களாக, சமூக பொருளாதாரம், சுற்றுப்புறச் சூழல், மற்றும் நாகரீகமும் பண்பாட்டுச் சூழல் போன்றவையும் அமைகின்றன. இவை தவிர குற்றம் ஏற்படுவதற்கு மரபு ரீதியான பரம்பரை ரீதியான மற்றும் உள்ளார்ந்த இயல்பு காரணமாக இருக்க முடியும் எனப்பட்டது. சுற்றுச்சூழல் கூட குற்றம் ஏற்படுவதற்குக் காரணமாக அமையமுடியும் என்பதை பழங்குடி இனத்தவர்களின் மூடநம்பிக்கை பில்லி சூனியத்தில் நம்பிக்கை வைத்து சண்டை இடுவது, பாலியல் குற்றங்கள் செய்வது, போதைக்கு அடிமையாவது என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு விளக்கப்பட்டது. ஆனால் புத்திசுவாதீனம் அற்றவர்கள் எந்த ஒரு காரணத்திற்காகக் குற்றம் புரிந்தாலும் அது குற்றமாகாது. அதற்கு உடற்கூறுகளும் இயற்கையாக அமையும் சூழ்நிலைகளும் காரணம் எனப்பட்டது. உளவியல் காரணங்களும் குற்றதம் புரிவதற்கு ஏதுவாக அமையும் என்பது உளவியலாளர்களின் கருத்தாக அமைந்திருக்கிறது.

அதேநேரத்தில் குற்றம் என்ற வரையறைக்குள் அடங்குகின்ற செயற்பாடுகள் சில நேரங்களில் குற்றமற்றதாக அமைகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. அதற்கு ஏற்றாற்போலான சட்ட இயக்கம், பொலிசார், வைத்தியர், தற்செயலானவை, அதிகாரம் பெற்ற அங்கத்தினர் என்போர் மேற்கொள்ளும்போது அது குற்றமற்றதாக விபரிக்கப்படுகின்றது.

இவ்வாறு குற்றம் என்பதற்கான பல்வேறு வரைவிலக்கணங்கள், விளக்கங்கள் காணப்படுகின்றபோதும் உண்மையில் இவற்றை குற்றம், குற்றமற்றநிலை என்ற இரட்டை எதிர்நிலைகளாக்குவதனால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளின் பின்னணியிலுள்ள அதிகாரம்

அல்லது நுண்ணரசியல் எத்தகையது என்பதை ஆராய்வதாகவும், அதற்கான தண்டனை முறைமைகளுக்கு அடிப்படையான சமூக மனநிலை பற்றி கவனம் செலுத்துவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

மனிதன் பிற மனிதர்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்கான அதிகார அமைப்பை தக்கவைப்பதற்கு குற்றம் - தண்டனை என்ற உருவாக்கங்கள் துணைபுரிகின்றதா?

**ஆய்வு நோக்கம்**

குற்றமும் தண்டனையும் என்ற அடிப்படைகள் உருவாக்கப்பட்டதன் பின்னணியிலான அதிகாரக்கட்டமைப்பைப் புரிந்து கொள்ளல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்விற்கான தரவுகள் புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் இணையத்தளக் குறிப்புக்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. இதற்காக விளக்கவியல் மற்றும் பகுப்பாய்வு முறைமைகள் பயன்படுத்தப்பட்டு ஆய்வு செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

**குற்றமும் சமூக அமைப்பும்**

குற்றம் ஏன் ஏற்படுகின்றது என்பதற்கு பொதுவான பல காரணிகள் குறிப்பிடப்படுகின்றன. உளவியல் காரணிகளும், சமூகக் காரணிகளும் அதில் பெரும்பங்கு வகிக்கின்றன. மேலும் குற்றம் புரிதலுக்கு, சூழ்நிலையும், குற்றவாளியின் மன நிலையுமே காரணம் என்பதை இவ் வாய்ப்பாடு விளக்குகிறது.

$$\frac{\text{Crime + tendency +situation = c=t+s}}{\text{Residency}}$$

(பொன்பரமகுரு,1999 : 36).

குற்றமானது மனிதனிடமிருந்தான வெளிப்பாடா அல்லது சூழலிலிருந்தான பிரதிபலிப்பா என்பது மிகப்பெரும் விவாதத்தினைக்கடந்து வந்ததாகும். சமூகத்தின் மீதான அக்கறை குறைந்துபோதல், தனிப்பட்ட பிரச்சினைகளில் மனிதன் ஆட்பட்டிருத்தல், சுயநலமிக்க போக்குடையவனாகக் காணப்படல், அதிகார அமைப்புக்குள் கட்டுப்பட்டாக வேண்டிய அவசியம் அல்லது பயம் என்பவற்றால்தான் பொதுவாக குற்றங்கள் ஏற்படுகின்றது என்ற பார்வை உண்டு.

உளவியலாளர் சிக்மண்ட் பிரைட் விளக்கும்போது மனதினுடைய செயற்பாட்டு சக்திகளை Id, Ego, Super Ego என மூன்றாகப்பிரிக்கிறார். இதில் Id என்பது ஒரு மனிதன் பிறக்கும்போதே அவனுள் காணப்படுகின்றது. விலக்கப்பட்ட ஆசைகளும், அமுக்கப்பட்ட எண்ணங்களும் ஆழ்மனதில் புதைந்திருக்கிறது. ஐன அதிகமான செயற்பாட்டையுடையதாக இருக்கும்போது மனிதன் அதிகமாகக் குற்றம் புரிகிறான் என்கிறார். பிரைடின் கருத்திலிருந்து மாறுபட்ட பின்னைய உளவியலாளர்களான மாஸ்லோ, கார்ள் றொகர்ஸ், வில்லியம் ஜேம்ஸ் போன்றோர் சூழல் தாக்கம் மனித நடத்யையில் செல்வாக்குச் செலுத்தும் என்றவாறாக பேசுகின்றனர். குற்றம் - தண்டனை என்ற வட்டத்திற்குள் உட்பட்ட பின்னர் சூழல் தாக்கத்தினால் அவன் மீண்டும் மீண்டும் குற்ற நடவடிக்கையில் ஈடுபடும் செயல் விளக்கப்படுகின்றது. இதனை குற்ற ஈடுபாடு என்ற ரீதியில் பார்க்கின்றபோது நாளடைவில்

அவன் எவ்வாறு அதற்குள் ஆட்பட்டு விடுகிறான் என்பதற்கு பழக்கம், அச்சமற்ற நிலை, குடும்பப் பின்னணி, தண்டனைக்கு பழக்கப்பட்டமை, வாழ்க்கை மீதான பிடிமானமற்ற நிலை என்பனவற்றை காரணமாக கூறுகின்றனர்.

ஆனால் குற்றம் - குற்றமற்ற நிலை என்பதைப் பார்க்கின்றபோது சமூகத்தில் பெரும்குற்றங்களைப் புரிவோர்கூட குற்றவாளி என்ற அமைப்பைப் பெறுவதில்லை. குறிப்பிட்ட சிலர் மட்டும் பாதிக்கப்படுகின்ற வேளை சமூக, சட்ட அதிகார அமைப்பு ஏற்படுத்தியிருக்கும் பெறுமானங்களும் நம்பிக்கைகளும் சரி – பிழை என்பதற்கு வகுக்கப்பட்டுள்ள எல்லைக்கோட்டை விட்டு தப்பிப்பவர்கள் பற்றி கண்டுகொள்வதில்லை. இந்த நிலை ஏன் ஏற்படுகின்றது? என்ற கேள்விக்கு ஏற்றத்தாழ்வான கட்டமைக்கப்பட்ட சமூக அமைப்பு காரணமாக இருக்க முடியும் என்ற விடையினைப் பரிசீலிக்கலாம்.

இச்சந்தர்ப்பத்தில் நீதி எவ்வாறு செயற்படுகின்றது என்பது பற்றி நோக்க வேண்டும். நீதி என்பது ஒரு செயல் அல்லது செயல் தவிர்ப்பால் பாதிப்புற்றவர் மேல் வினைபுரிவதாகும். நீதியைப் பாதுகாக்கும் காவலர்களாக சட்டம், காவல்துறை, நீதி மன்றங்கள் என்பன குறிப்பிடப்படுகின்றன. நீதிக்கு எதிராகச் செய்யப்படுபவை எல்லாம் குற்றங்கள் என இவை வகுத்து வைத்திருக்கிறது. ஆனால் இதற்குள் அடங்காமல் தப்பிப்பதற்கான வழிமுறைகளும் உண்டு. உதாரணமாகப் பார்க்கின்றபோது, குற்றம் இழைத்தவரைக் காட்டும் சான்றுகளை அழித்தல் அல்லது மறைத்தல், குற்றமற்ற நிலையைக்காட்ட சாட்சிகளை தயார்செய்தல், அதிகாரத்தில் உள்ளவர்களையும் அவர்களக்கு நன்மையளிக்கும் விடயங்களைக்கொண்டு குற்றத்தை திசை திரப்புதல் என்பவையெல்லாம் சமூகத்தில் நிகழ்கின்றன. இங்கு எது நீதி? என்று பார்க்க வேண்டியுள்ளது. மனிதன் உருவாக்கிய சட்டமும் நீதியும் ஒரே நேரத்தில் சிலரை குற்றம் புரிந்தவர்களாகவும், சிலரை குற்றமற்றவர்களாகவும் தக்கவைத்திருக்கும் நிலமையை எத்தகைய பார்வைக்குள் கொண்டு வருவது? அதிகாரம் பெற்றவன் ஏனையவர்களை கண்காணிக்கும், அவன்மீது ஆதிக்கம் செலுத்தும் முறைமையைத்தான் இது காட்டுகின்றது. இந்த சமூக அமைப்பு கேள்விக்குள்ளாக்க வேண்டியதாகும்.

**சட்டமும் தண்டனையும்**

சட்டம் என்பது ஒரு நிறுவன அமைப்பு முறையால் அந்நிறுவன ஆளுகை எல்லைக்குள் வாழும் அனைவரையும் ஒழுங்குபடுத்தும் விதிகள், நெறிமுறைகள் போன்றவற்றைக் குறிக்கும். ஒரு குறிப்பிட்ட செயல் அல்லது செயல்தவிர்ப்பு குறித்த தண்டனை வழங்குகிற அதிகாரத்தை தன்னகத்தே கொண்டிருப்பதே இது கொண்டிருக்கிறது. சட்டத்தின் தோற்றம் மனிதகுலத்தின் தொன்மைச் சமூக வாழ்க்கைக்காலத்தின் தோற்றத்தோடு தொடர்புடையதாகும். சமூகமாகத் திரண்ட மனிதர்களிடம் ஏற்பட்ட வகுப்பு வேறுபாட்டால் தோன்றிய அரசு எனும் நிறுவனத்தின் தோற்றத்தோடு சட்டத்தின் வரலாறு தொடங்குகிறது.

இன்னதைச் செய் மற்றும் இதைச் செய்யாதே என்று உரைக்கும் அதிகாரமும் அதனை ஒப்பாத அல்லது மீறுகிற எவரையும் தண்டிக்கிற அதிகாரமும் சட்டத்திற்குரியதாக கருதப்படுகின்றது. இது சமூகத்தை ஒழுங்கு, நெறிமுறை கட்டுப்பாடு என்பவற்றுக்குள் ஆட்படுத்தி கண்காணித்துக் கொண்டிருக்கிறது. மறுபக்கம், சட்டம் மக்களுக்கானது என்ற ரீதியிலேயே அமைகின்றது. பாராளுமன்றமோ, சட்டமன்றங்கள் மாத்திரமன்றி, பழக்கவழக்கங்களின் மூலம் உருவான கருத்துக்களும்கூட சட்டமாகக் கொள்ளப்படுகின்றது.

ஒரு செயலைக் குற்றமெனத் தீர்மானிப்பதற்கு அச்செயல் தீய எண்ணத்தோடு செய்யப்பட்டதா என்பதைச் சட்டம் ஆராய்கின்றது. தீய எண்ணத்தால் செய்த செயலையே குற்றமெனச் சட்டம் கொள்ளுகின்றது. அத்தீய எண்ணத்தைச் சட்டநூல் 'குற்றமனம்' என்று குறிக்கின்றது. 'குற்றமனம்' என்பதை ஆங்கிலத்தில் 'Guilty mind' என்று கூறுவார்கள். பொதுவாக, 'குற்றமனம்' இன்றி ஒருவர் செய்த செயலைக் 'குற்றம்' எனச் சட்டம் கொள்ளவதில்லை. புறச் செயலை மட்டும் வைத்து ஒன்றைக் "குற்றம்" எனக் கூறுவதில்லை

அது குற்றமனதோடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்". என்று Salmond என்ற அறிஞர் கூறுகின்றார் (*Markus D. 2002:*44).

ஒரு குற்றத்திற்கு இரு கூறுகள் உண்டு ஒன்று அகநிகழ்வான குற்ற எண்ணம் (Mens rea) மற்றொன்று புற நிகழ்வான விலக்கப்பட்ட தீய செயல் (Actus reus) இவ்விரண்டும் ஒன்றுபடும் போதுதான் ஒருவரைக் குற்றவாளியெனச் சட்டம் தண்டிக்கிறது. இவ்வாறு 'கென்னி' என்ற குற்ற இயல் சட்ட வல்லுனர் விளக்குகிறார். பலதிறப்பட்ட குற்றங்களையும் விவரித்து அவற்றின் இலக்கணத்தைக் கூறுவது குற்றத் தொகுப்புச் சட்டமாகும். அச்சட்டத்தில், ஒவ்வொரு குற்றத்தின் இலக்கணத்தைக் கூறும் பிரிவிலும் அக்குற்றத்திற்கான குற்ற மனநிலையையும் கூறப்பட்டிருக்கிறது.

'கருதி' (lntentlonally) 'தெரிந்து' (Knowingly) 'மனம் இசைந்து' (voluntarily) 'வஞ்ச மனத்துடன்' (Fraudulently) 'நேர்மையின்றி' (Dishonestly) என்ற சொற்கள் அந்தந்தக் குற்றத்திற்கு வேண்டிய 'குற்ற மனதினைக்' காட்டி நிற்கின்றன. நேர்மையில்லாத எண்ணத்துடன் பிறர் பொருளை எடுப்பது தான் திருட்டுக் (Theft) குற்றமாகிறது. வஞ்சமனத்துடன் பிறர் பொருளை அபகரித்தலே 'ஏமாற்றுதல்' (Cheating) என்ற குற்றமாகும். பிறர் உடலுக்கு ஊறுவிளைவிக்க வேண்டுமென்ற கருத்தோடு பிறருக்குக் காயம் விளைக்கும் செயலே 'காயம் விளைத்தல்' (Causing thurt). அந்தக் குற்ற மனத்தோடு குற்றச் செயலைச் செய்தனரா என்பதை நீதிமன்றம் ஆராய்கின்றது. குற்ற மனம் இன்றிச் செயல் புரிந்தவர்களைக் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து தண்டிப்பது இல்லை. 'குற்ற மனத்துடன் செய்யப்படாத செயல் குற்றம் ஆவதில்லை' என்ற கொள்கையை இலத்தீன் மொழியில் Actus non facit reum, nisi mens sit rea" என்று கூறுவார்கள் . 'குற்றமனம் இன்றிக் குற்றம் இல்லை' என்ற இந்த விதி மொழி (maxim) குற்றவியல் சட்டத்தின் அடிப்படை நெறியாகும் (Elizabeth A. Martin, ed.2003).

குற்றம் ஒரு சமூக நிகழ்வு, சமூகத்தின் கையில் தனி நபர் ஒரு கருவி அவர் புரியும் குற்றங்களில் சமூகத்தின் பொறுப்பேற்பை உறுதி செய்யும் நடவடிக்கைகள் தண்டனை முறைகளில் வெளித் தோன்றுகின்றன. உலகில் உள்ள எல்லா உயிர்களும் தண்டனைக்கு அஞ்சியே ஒழுகுகின்றன. தண்டனை அளிப்பதன் நோக்கங்கள் பலவாகும். சமுதாயம் தொடர்ந்து வாழ்வதற்கான உறுதியினை உருவாக்கவும், மக்கள் குற்றங்கள் புரிய அஞ்சுதல் வேண்டும் என்ற நோக்கத்திற்காக தண்டனை வழங்கப்படுகின்றது என்கின்றனர்.

பண்டைய காலத்தில் நீதி வழங்குதல் என்பது அரசனின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாக இருந்தது. விசாரணை நடத்தி குற்றவாளி எனக் கண்டால் தண்டனை வழங்குவது, இல்லை என்றால் விடுவிப்பது நீதி முறைமையாகும். பண்டைய காலத்தில் கிராமங்களில் சிறு நீதி மன்றங்கள் இருந்தன. கிராமத்தலைவரும், பெரியார்களும் அந்தச் சிறு நீதி மன்றங்களில் அங்கம் வகித்தனர். சிறு களவுகளையும், சிறு குற்றங்களையும் அந்நீதிமன்றம் விசாரணை செய்தது. கிராமத்தில் உள்ள எல்லைத்தகராறுகள் போன்றவை, அந்நீதிமன்றத்தில் பெரும்பாலான நீதிபதிகளின் கருத்திற்கேற்ப நீதி வழங்கப்பட்டது (சண்முகசுந்தரம்,1988: 27).

நீதி வழங்குவதில் குற்றவாளியைத் தண்டிப்பது என்ற நியதியே இருந்து வந்துள்ளது. குற்றவாளிகளைச் சீர்திருத்தி நல்வழிக்குக் கொண்டு வருதல் அக்காலத்தில் நடை முறையில் இல்லை. அயல்நாட்டு ஒற்றர்கள் வேவு பார்க்க வந்தால் அவர்களுக்கு மரண தண்டனையளிக்கப்பட்டு அரச துரோகத்திற்கும் மரண தண்டனையே வழங்கப்பட்டது. யானையின் காலால் மிதிபட்டு சாகடிக்கப்படும் தண்டனையும் வழங்கப்பட்டது. பழங்காலத்தில் குற்றங்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்பட்டது. கடன் பெற்றவன் அதைத் திரும்பக் கொடுக்க மறுத்தால், கடன் வாங்கவில்லை என்று கூறி மறுத்தால், அவனை

நல்ல பாம்பு வைத்த குடத்திலே கைவிடச் சொல்வது வழக்கம். கடன் வாங்கியிருப்பின் கடிக்கும். அன்றெனின் கடிக்காது என்ற நம்பிக்கை இருந்தது (கிருட்டிணன், 1992 :65). எனினும் நவீன காலத்தில் இது மாற்றம் பெற்றிருக்கிறது.

**தண்டனை முறைமைகள் மீதான விமர்சனங்கள்.**

ஆதிகாலத்தின் தொடர்ச்சியாக நவீன காலத்திலும் தண்டனைகள் மூலம் மனிதர்களை குற்றவாளிகளாக அணுகும் முறைமை காணப்படுகின்றது. அவை, எச்சரிக்கை தண்டனைக் கொள்கை அல்லது தடுதண்டனைக் கொள்கை (Deference punishment or preventive punishment), சீர் திருத்தத் தண்டனைக் கொள்கை (Reformative punishment), பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கை (Retributive punishment ) என்ற மூன்று வகைப்பாட்டிற்குள் அடங்குகின்றது.

தடு தண்டனைக் கொள்கை என்பது குற்றவாளி குற்றம் செய்யாமல் இருப்பதற்காக தண்டனை வழங்குவதாகும். அதாவது மற்றவர்களை எச்சரிப்பதற்காக வழங்கப்படும் தண்டனையாகும். அதாவது குற்றவாளி குற்றத்தினை மீண்டும் செய்யாதிருக்கும் அதேவேளை அவரை அவதானித்து மற்றவர்களும் குற்றம் செய்யாமல் இருக்க வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டதே எச்சரிப்புத்தண்டனைக் கொள்கையாகும். இங்கு குற்றவாளி என்ற ரீதியில் மனிதன் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றான். இது மிகக்கொடூரமானதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களின் நலனுக்காக தனிமனிதன் தண்டிக்கப்படுவதை ஊக்குவிக்கும் இக்கொள்கை மனிதனை ஒரு காட்சிப்பொருளாக்கியிருக்கிறது. இது அதிகாரத்தின் தான்தோன்றித்தனமான செயற்பாடாகும்.

சில குற்றங்களுக்கு மரணதண்டனை வழங்கும் நிலைப்பாடும் காணப்படுகின்றது. 18ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இத்தாலிய வழக்கறிஞர் சிகாரே பெக்காரியா, பிரெஞ்சு தத்துவ மேதை வால்டேர், ஆங்கிலேய சீர்திருத்தவாதி ஜெரிமி பென்தாம் போன்றவர்கள் மரண தண்டனை என்பது மனித சமுதாயத்துக்கும், மனிதாபிமானத்துக்கும் களங்கம் ஏற்படுத்தும் சட்டப்பிரிவு என்று கூறி இதற்கு எதிராகக் குரலெழுப்பினர். இவர்கள் குரலெழுப்பி ஒரு நூற்றாண்டு காலம் கடந்த பிறகு 1853-ல் வெனிசுலாவும், 1867-ல் போர்ச்சுக்கலும் மரண தண்டனையைத் தங்களது நாட்டுச் சட்டத்திலிருந்தே அகற்றுவதாக அறிவித்தன. இப்போது அநேகமாக மேற்கு ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் மரண தண்டனை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. 1965ல் இங்கிலாந்தும் மரண தண்டனையை ரத்து செய்து தீர்மானம் நிறைவேற்றியபோது, உலகம் முழுவதும் மரண தண்டனைக்கு எதிரான குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இத்தண்டனைக்கு எதிரான ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக ஒருவனைத் தண்டிக்க முடியாது என விமர்சிக்கப்பட்டது. வில்லியம் வில்லி இன் கருத்தின் பிரகாரம் நாட்டை ஆள்வோர் நிரபராதிகளைத் துன்புறுத்துவதையும் திறமை குறைந்த ஆசிரியர்கள் அப்பாவி மாணவர்களுக்கு தண்டனை வழங்குவதையும் இந்தத் தண்டனைக் கொள்கையின் விளைவாக காண்கின்றோம் என்கிறார்.

சீர்திருத்தத் தண்டனைக் கொள்கை என்பது சமுதாயத்தில் குற்றமிழைத்தவர்கள் ஒவ்வொருவரும் திருந்தி புதிய மனிதர்களாக மாற வேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டதே சீர்திருத்தக் தண்டனைக் கொள்கையாகும். இங்கு குற்றவாளியை நன்னடத்தை உள்ளவனாக மாற்றுவது நோக்கமாகிறது. வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலும் இக்கொள்கை நடைபெறுகின்றது. குற்றம் புரிந்தவனை சீர்திருத்த நினைக்கும் பலரும் குற்றவாளியைத் தண்டனைக்கு உள்ளாக்குவதை எதிர்க்கிறார்கள். இங்கு திறந்தவெளி சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டு சீர்திருத்தம் நடைபெறுகின்றது. நன்னடத்தை நிலையங்கள், பெண்கள் நன்னடத்தை நிலையங்கள், சிறுவர் நன்னடத்தை நிலையங்கள் என்பவற்றின் உருவாக்கம் நிகழ்கிறது. குற்றவாளியை சீர்திருத்துதல் என்பதற்காக மன்னித்தல், கல்வியறிவு புகட்டுதல், அன்பாக நடந்து கொள்தல்,

சௌகரியமான சிறைச்சாலையை அளித்தல், தண்டனைக் குறைப்பு போன்றவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கை எனும்போது குற்றம் செய்தவனை பழிவாங்கும் நோக்கமுடையதாக இருக்கிறது. குற்றம் செய்தவனை தடுப்பதற்காக அல்லது திருத்துவதற்காக அல்லாமல் பழி வாங்குவதற்காக வழங்கப்படும் தண்டனை முறையாகும்.

இங்கு ஒருவன் அனுபவித்த அதே துயரத்தினை குற்றவாளியும் அனுபவிக்க வேண்டும் என்பதே இக்கொள்கையின் சாராம்சம். இக்கொள்கையின் படி கொலைக்கு கொலை, பல்லுக்கு பல், கண்ணுக்கு கண் என்ற அடிப்படையில் தண்டனை வழங்கப்படும். இதைச் சில சமயங்களிலும் ஆதரித்து இருக்கின்றது. இக்கொள்கையில் குற்றத்திற்கு தண்டனை வழங்குவதன் மூலம் நீதியை நிலைநிறுத்தும் போக்கைக் காணலாம். இதன் விளைவாக சமூக அமைதியை ஒழுக்கத்தை பேணலாம் என்ற கருத்தும் கூறப்படுகின்றது. பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கையை காண்ட், ஜே.டி. மாப்பொட் (J. D Mabbott) என்பவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். காண்ட் குற்றவாளிக்கு அவன் செய்த குற்றத்திற்கு சமமான தண்டனை கொடுக்கப்படல் வேண்டும் என்கிறார். இதனை துன்பத்துக்குத் துன்பம் தரும் தண்டனை முறை எனவும் அழைக்கலாம். இருந்தபோதிலும் ஒழுக்கவியல் இத்தண்டனை முறையை தீங்கானது எனக் கருதுகிறது. துன்பத்தை அனுபவித்தவர் பழிவாங்க நினைக்கும் வாய்ப்பை தற்காலத்தில் நீதிமன்றங்கள் இல்லாதொழிப்பதைக் காணலாம். இங்குள்ள முக்கியமான பிரச்சினை என்னவெனில் சமூகத்தை நிலையாக வாழ வைக்க இத்தண்டனை முறை உதவுமா? அவ்வாறெனின் எவ்வாறு உதவும்? என்பதேயாகும். இதன் குறைபாடுகள் எனக்கூறப்படும் கருத்துக்களாக, களவு எடுத்தவனை எவ்வாறு தண்டிக்கலாம், கப்பம் பெறல், கடத்தல் என்ற செயல்களுக்கு எவ்வாறு தண்டனை வழங்குவது, பாலியல் வல்லுறவு, பலாத்காரம் போன்ற செயற்பாடுகளை செய்தவனை எவ்வாறு தண்டிப்பது? என்பன காணப்படுகின்றன. இது மிக ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகும்.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

மனிதனது வாழ்க்கைக்கான போராட்டம் இயற்கை சார்ந்ததாக அமைந்திருந்தநிலை மாறி சமூகக் கட்டமைப்புக்கள் சார்ந்ததாக ஆகியிருக்கின்றது. சமூகக்கட்டமைப்பு ஏற்படுத்தியிருக்கும் அதிகார அமைப்பானது ஒழுங்குபடுத்தல்களாலும் வரிசைப்படுத்தல்களாலும் மனிதர்களை கண்காணித்துக்கொண்டிருக்கிறது. 19ஆம் நூற்றாண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் மனிதனைச் சட்டகப்படுத்தும் முயற்சிகள் தோற்றம்பெற்றுவிட்டன. நாகரீகம் என்ற பெயரில் முறைமையாக்கங்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து நவீன யுகம் அடக்கியாழ்தலையும் அத்துமீறலையும் நியாயப்படுத்தியது. அவ்வாறு உருவாக்கப்பட்ட பாடசாலை, மருத்துவகூடம், சிறைச்சாலை என அனைத்தும் மனிதனை கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவுமான நிறுவகங்களாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதனடிப்படையில்தான் சரி – பிழை, குற்றம் - குற்றமற்ற நிலை, மேலானது – கீழானது போன்ற இரட்டை எதிர்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டு மனித நடவடிக்கைகள் மைய விளிம்பு நிலைக்கு உட்படுத்தப்பட்டது.

கட்டமைக்கப்பட்ட சமூக அமைப்புக்குள் உள்ளடங்காத மனிதர்களை குற்றம் புரிந்தவர்களாக்கி தண்டனை வழங்குவதற்கான முறைமைகளும் உருவாக்கப்பட்டன. ஆதிகாலத்தில் மனிதன் தண்டனைக்குள்ளான வழிமுறைகள் நவீனகாலத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ‘நவீனகாலத்தில் மனிதன் கண்காட்சியாக்க வைக்கப்படவில்லை, குற்றவாளியின் பின்னணி கவனத்தில் கொள்ளப்படுகின்றது, குற்றவாளிக்கான தண்டனையை நீதிபதிகள் மட்டுமன்றி உளவியல் மருத்துவர்கள், சமூகப் பணியாளர்கள், பிற வல்லுநர்களும் குறுக்கீடு செய்து தீர்மானிக்கிறார்கள், தண்டனை

வழங்குவது மட்டுமன்றி குற்றவாளியைத் திருத்தும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது (சுரேஷ், 2007 : 34). இங்குதான் மனிதனை கண்காணிக்கும் அமைப்பு உருவாக்கப்படுகின்றது. மௌனமாகக் கீழ்படியும் நிலையை இது தோற்றுவிக்கிறது. குற்றத்திற்கான தண்டனை முறைமைகளும் தான் எதற்காகத் தண்டிக்கப்படுகின்றோம் என்ற நியாயப்படுத்தலற்றதாகவே காணப்படுகின்றது. தன்னிலைசாராத முடிவுகளை மேற்கொள்ளும் பொறுப்பை மனிதர்களிடமிருந்து அதிகார அமைப்புக்கள் பெற்றுக்கொண்டுள்ளன. 'குற்றமும் தண்டனையும்' பற்றி ஆராய்ந்த சிந்தனையாளர் பூக்கோ, பண்டைய முறை பழிக்குக்குப்பழி வாங்குதல் என்பதன் மூலம் உடல் வதைக்கப்படுவதை விரும்பியது. ஆனால் நவீன யுகம் உள்ளத்திலிருந்தான மாறுதலை எதிர்பார்க்கிறது என்கிறார். இங்கு மனிதன் சாதுவானவான உடல்களாக்கப்பட்டு அதனை விரும்பியபடி பயன்படுத்தும் நிலை ஆக்கப்பட்டிருக்கிறது என்கிறார். இதன்படி இன்று குற்றம் - தண்டனை என்ற உருவாக்கங்கள் மனிதனைக் கட்டுப்படுத்தி கண்காணிக்கும் அதிகார அமைப்பினைத் தக்க வைத்துக்கொள்ளவே உதவுகிறது.

**முடிவுரை**

குற்றம் நிகழ்தலும் அதற்கான தண்டனைகளால் கண்காணிப்பதும் இன்றைய காலகட்டத்தின் சவால்களாகும். தண்டனைக்குப பதிலாக நோய் தீர்க்கும் முறை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென உளமருத்துவர்களும் சமூக விஞ்ஞானிகளும் கூறுகின்றனர். சட்ட மெய்யியலாளர்கள் தண்டனையை நியாயப்படுத்த முடியும் என்றும் ஆனால் தண்டனை வழங்குவதற்கு என்று உருவாக்கப்படும் அடிப்படைத் தளங்களைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டு என்கின்றனர். மெய்யியலானது உளமருத்துவம் மற்றும் சமூக விஞ்ஞானக் கூற்றுக்களில் தங்கி இருக்க வேண்டியதில்லை. தண்டனையை நிராகரித்தல் அல்லது ஆதரித்தல் என்பதைவிட தண்டிப்பதில் எழும் ஒழுக்கப் பிரச்சினைகள் என்ன? தண்டனை ஏன் அவசியம் அது நியாயப்படுத்தப்படக் கூடியதா? என்பன பற்றி ஆய்வு செய்கிறது. அதுமட்டுமன்றி சமூகக்கட்டமைப்பின் பின்னரான அதிகார அமைப்பை தக்கவைப்பதற்காகவே குற்றம் - தண்டனை என்ற எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளன.

## References


01. Bhardwaj, (2001), Crime Criminal Justice and Human Rights, Delhi: Konark Publishers pvt. Ltd.
02. Carl Elliott, (1996), *The rules of insanity: moral responsibility and the mentally ill offender,* SUNY Press.
03. *Dubber, Markus D. (2002). Criminal Law: Model Penal Code. Foundation Press.*
04. Elizabeth A. Martin, ed. (2003). Oxford Dictionary of Law. Oxford: Oxford University Press
05. Garr,K.D, (2002),C*riminal law and criminology*, New Dhili : Deep&Deep Publication.
06. Narashmen R.K, (1999) *Human Rights and Social Justice*, New Delhi : Commen wealth Publishers.
07. கிருட்டிணன்.அ, (1992), *தமிழர் பண்பாட்டியல்,* சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
08. அனஸ், எம்.எஸ்எம்., (2003), மெய்யியல் அறிமுக உரைகள், பேராதனை : பண்பாட்டு வட்டம்.
09. பொன்பரமகுரு, (1999), *தண்டனையியல்*, சென்னை : பூம்புகார் பதிப்பகம்.
10. சேதுராமன்.ஜி, (1981), *தமிழ்நாட்டு சமூதாய பண்பாட்டுக் கலை வரலாறு*, சென்னை : ஜெ.ஜெ பப்ளிக்கேசன்ஸ்.
11. சுரேஷ், எம்.ஜி., (2007), 'பின்நவீன சிந்தனையாளர் வரிசை : ∴பூக்கோ', இந்தியா : அடையாளம், புத்தானந்தம்.

12. சிங்காரவேலனார், (2001), *குற்றமும் தண்டனையும்*, சென்னை : கமலா பதிப்பகம்.
13. சண்முக சுப்பிரமணியம், மா., (1995), *குற்ற இயல் சட்டம்,* சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.
14. சண்முகசுந்தரம், (1988), *நம் பண்டைய நீதி நடைமுறைகள்(சட்ட விளக்கம்),* சென்னை : கலைக் கருவூலம்.